

தந்தை பெரியார் பிறந்த நாளான 17.9.2024 அன்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சாலவாக்கம் ஒன்றிய திமுக சார்பில் தந்தை பெரியார் 146 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா நேற்று காலை சாலவாக்கம் நிலையம் அருகில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் டி. குமார் முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் சத்யா சக்திவேல் அனைவரையும் வரவேற்றார். இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி சாதி மத வேதமின்றி கலந்து கொண்ட பொதுமக்களுடன் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

### தந்தை பெரியார் 146 -வது பிறந்த நாள்:

# சாலவாக்கத்தில் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் உறுதிமொழி ஏற்பு!

## ஒன்றியச் செயலாளர் டி.குமார் - நிர்வாகிகள் பங்கேற்பு!

காஞ்சிபுரம், செப். 19 - தந்தை பெரியார் பிறந்த நாளான 17.9.2024 அன்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் சமூக நீதி உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சி காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சாலவாக்கம் ஒன்றிய திமுக சார்பில் தந்தை பெரியார் 146 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா நேற்று காலை சலவாக்கம் நிலையம் அருகில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் டி. குமார் முன்னிலை விகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் சத்யா சக்திவேல் அனைவரையும் வரவேற்றார்.

இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி சாதி மத வேதமின்றி கலந்து கொண்ட பொது மக்களுடன் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து பெரியாரின் 146 ஆவது பிறந்த நாளை குறிக்கும் வகையில் அப்பகுதி கிராம மக்களுக்கு 146 தென்னங் கன்றுகள் வழங்கப் பட்டது.

மேலும் சாலவாக்கம் ஊராட்சியில் பணி புரியும் 50 தூய்மை பணியாளர்களுக்கு காய்கறி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் நிர்வாகிகள் வெங்கடேசன், சிவராமன், சத்யா சக்திவேல், வெங்கட்ராமன், சேகர், அழகப்பன், நந்தா, முரளி, விஷ்ணு உள்ளிட்ட திமுக கட்சியினர் கலந்து கொண்டனர்.



கழகத்தின் தலைவர் முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக முப்பெரும் விழாவினை முன்னிட்டு கழக தோழர்களின் இல்லந்தோறும் இரு வண்ண கொடியினை ஏற்றும் நிகழ்ச்சி ற்றும் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார்பிறந்த நாள் விழாவும் நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில் தந்தை பெரியார் அவர்களில் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலியும் கழகக் கொடி ஏற்றும் விழாவும் சென்னை கிழக்கு மாவட்ட தி.மு. கழக செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதலுடன் அம்பத்தூர் தெற்கு பகுதி 87 வட்டத்தில் நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில் சென்னை கிழக்கு மாவட்ட திமுக ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட அமைப்பாளர் L.P.F.மோகன், 87 வது வட்ட கழக செயலாளர் பிரகாஷ்குமார் , 87வது வார்டு மாமன்ற உறுப்பினர் மற்றும் பொதுக்குழு உறுப்பினர் மருத்துவர் பூர்ணிமா, மாவட்ட பிரிதிநிதிகள் பா.மாறன் பாஸ்கர்,பாடி சுரேஷ். பாடி படவட்டம்மன் திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவர் திருமதி .உமா மோகன், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் அண்ணாதுரை , மற்றும் 87வது வட்ட கழக நிர்வாகிகள், மகளிர் சகோதிரிகள், கழகத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.

### வீ. கவிகணேசன் தலைமை! க.வீ.சத்தீஷ்குமார் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# திருவொற்றியூர் 12 வது வட்டக் கழக பொது உறுப்பினர் கூட்டம்!

## மாதவரம் எஸ் சுதர்சனம் எம்.எல்.ஏ. சிறப்புரை! கலாநிதி வீராசாமி எம்.பி. - கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தி.மு.தனியரசு பங்கேற்பு!

சென்னை செப். 19

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 12 வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று(19.09.2024 வியாழக்கிழமை) மாலை 6.00 மணியளவில் சங்கீதா,பேன்கிட்ஹால், வன்னியர் தெரு, காலடிப் பேட்டை, திருவொற்றியூரில் தலைமை கழக வழக்கறிஞர் 12வது வார்டு மாமன்ற உறுப்பினர் வீ. கவி கணேசன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. சிறபுரையாற்றுகிறார். மருத்துவர் கலாநிதி வீராசாமி எம்.பி, கே. பி.சங்கர் எம்.எல்.ஏ. தி.மு. தனியரசு எம்.சி. ஆகியோர் பேசுகின்றனர்.

மாவட்ட பிரதிநிதி எஸ்.பாஸ்கரன் வரவேற்புரையாற்றுகிறார். எம். வி.குமார், பி.எஸ்.சைலஸ், பா.கண்ணபிரான், வ.மோகன், எஸ்.பாக்கியமணி, ஏ.தாராபானு, மு. சண்முகம், கே.வேணுகோபால், ஏ.ஜெயசீலன், J. ராஜ்குமார், எம். எஸ். பொன்ராஜ், கார்தீஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மயிலை தசரதன், இரா.பத்மநாபன், மிசா.ப.மதிவாணன், வி.ராமநாதன், குறிஞ்சி எஸ்.கணேசன், எல்.ராமகிருஷ்ணன், மு.ராஜேந்திரன், அறிவழகி, பாலகிருஷ்ணன், எம். ஆனந்தன், இரா.முருகேசன், டி.ஏ.ராஜி, சாந்தி, பக்தன், ஆர். சி.ஆசைதம்பி, ஆர். எஸ்.சம்பத், கே.பிரபாவதி, ஆர்.குமரேசன், கிழக்கு பகுதி வட்டசெயலாளர்கள்

கு.கார்த்திகேயன், டி.சி. வி.மணிகண்டன், எம். எல்.சரவணன், எஸ். தமிழ்ச்செல்வன், குறுத்து சி.முனுசாமி, கேபிள் டிவி எம்.ராஜா, இரா.சந்தர், ஏகா.கார்த்திகேயன்,

மாவட்ட பிரதிநிதிகள் எம்.நந்திவர்மன், ஆர்.ரஜினிபாபு, ஆர்.டில்லி, டி.டி. எம்.பாபு, வி.பழனிவேல், அ.அப்துல்சலீம், கே.கார்த்திகேயன், ம.எத்திராஜ், ப.சந்தானகிருஷ்ணன், மு.முத்துகுமார், மாமன்ற உறுப்பினர்கள் டி.சி. வி. ராஜகுமாரி, உமாசரவணன், சரண்யா கலைவாணன், சுசிலாராஜா, பானு மதிசந்தர் முன்னான் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஏ.தங்கராசு, வி.வேலு எல். கிருஷ்ணவேணி, அண்ணாதுரை, எம்.மாலதி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் முன்னணியினர் ஆகியோர் பங்கேற்கின்றனர். மாவட்ட பிரதிநிதி ம.ஜெயராமன் நன்றிகூறுகின்றனர் 12 அது வட்டக் கழகச் செயலாளர் க.வீ.சத்தீஷ் குமார் கூட்ட ஏற்பாட்டை செய்துள்ளார்.

### பெரம்பலூர் - ஆத்தூர் சாலையை

# 4 வழிச் சாலையாக மாற்றிட வேண்டும்!

## ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரியிடம் அருண் நேரு எம்.பி. கோரிக்கை!

திருச்சி, செப். 19-

பெரம்பலூர் ஆத்தூர் சாலையை 4 வழிச் சாலையாக மாற்ற எம்.பி அருண் நேரு கோரிக்கை ஒன்றிய நெடுஞ்சாலை துறை அமைச்சர் நிதின் கட்கரியை சந்தித்து கோரிக்கை வைத்தார்.

பெரம்பலூர் முதல் ஆத்தூர் வரையிலான 4 வழிச்சாலை திட்டத்தை விரைவுபடுத்தக் கோரி அத்தொகுதியின் தி.மு.க. எம்.பி. அருண் நேரு, ஒன்றிய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரியை சந்தித்து கோரிக்கைவிடுத்துள்ளார்.

தஞ்சையில் இருந்து அரியலூர், பெரம்பலூர், வீரகனூர், ஆத்தூர், வாழப்பாடி வழியாக சேலத்திற்கும், சேலத்தில் இருந்து தஞ்சாவூருக்கும் நாள்தோறும் விரைவு அரசு பஸ்கள் இயக்கப்படுகின்றன. இதில் தினமும் ஏராளமான பொதுமக்கள் பயணித்து வருகின்றனர்.

அதே போன்று அரியலூரில் இருந்து பல டன் சிமெண்ட் மற்றும் சரக்குகள் லாரிகளில் ஏற்றி

சேலம் மற்றும் பிற மாவட்டங்களுக்கு ஆத்தூர் வழியாக கொண்டு செல்லப்படுகிறது. மேலும் தற்போது பெரம்பலூரில் மருத்துவக்கல்லூரி,

பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவ -மாணவிகளும் இந்த வழியில் பேருந்துகளை பயன்படுத்தி வருவதால் இந்தசாலை முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

இதனையடுத்து கடந்த 2019ஆம் ஆண்டு பெரம்பலூர் ஆத்தூர் விரிவு படுத்திட சாலையையும் அரசின் ஒன்றிய நெடுஞ்சாலைத்துறை சார்பில் ரூ.19 கோடியே 60 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றன.

இந்த நிலையில் பெரம்பலூர் முதல் ஆத்தூர் வரையிலான 4 வழிச் சாலைத் திட்டத்தை விரைவு படுத்தக் கோரி பெரம்பலூர் தொகுதி திமுக எம்.பி., ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரியை டெல்லியில் சந்தித்து கோரிக்கை வைத்துள்ளார்.

இந்த சந்திப்பு குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், "பெரம்பலூர் முதல் ஆத்தூர் வரையிலான 4 வழிச் சாலைத் திட்டம் குறித்து ஒன்றிய சாலைப் போக்குவரத்தும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரியை சந்தித்து கோரிக்கை வைத்தேன்.

இந்தச் நெடுஞ்சாலையானது உள்ளூர் விவசாயிகள் மற்றும் வணிகர்களின் வளர்ச்சிக்கு ஒரு பெரும் திருப்புமுனை யாக அமைவதோடு அல்லாமல் சரக்கு போக்குவரத்தை அதிகரித்து அப்பகுதியில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும்" என்று தெரிவித்துள்ளார்.


# இதய அஞ்சலி




திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி,
கழக முன்னாள் துணைப் பொதுச்செயலாளர், முன்னாள் பால்வளத்துறை அமைச்சர்,
கழக ஆதிதிராவிட நலக்குழு அணித்தலைவர்

**அண்ணன் க.சுந்தரம் அவர்கள்**

உடல் நலக்குறைவால் காலமானார்.

அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தாருக்கும், கழகத்தினருக்கும்
**சென்னை வடகிழக்கு மாவட்டம்,**
**மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில்**
ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

வருத்தத்துடன் : **புழல் M.நாராயணன்** B.Sc., M.A. B.L.,
பகுதி செயலாளர், மாதவரம் வடக்கு பகுதி திமுக